**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | |
|---|---|
| Case No: | **SC.No.18/2026** |
| Prosecution Witness : | **LW - 1 / PW - 1** |
| Name : தினேஷ் | Taluk : |
| S/o. : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day
06.06.2026

**(1, 2, 4 எதிரிகள் ஆஜர், 3ம் எதிரி ஆஜர் இல்லை, 3ம் எதிரிக்காக 317 குவிமுச மனு ஏற்பு)**

**முதல் விசாரணை**

**நான் ஆலந்துறை அறக்கட்டளை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் MBA படித்துள்ளேன். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு மாலை 06.30 மணியளவில் வீட்டின் அருகில் நின்றுகொண்டிருந்தபோது, ஒரே கூட்டமாக அங்கு வந்தார்கள், அப்போது என்ன என்று பார்த்தபோது, என்னை கீழே தள்ளிவிட்டார்கள், எனக்கு இடது நெற்றியில் காயம் ஏற்பட்டது. அரியலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். போலீசார் அங்கு வந்தார்கள். என்னிடம் வெள்ளை பேப்பரில் கையெழுத்து கேட்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது ஆகும். அது அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.**

மேற்சொன்ன சாட்சியை பிறழ் சாட்சியாக கருத கோரி அரசு தரப்பில் வேண்டுதல் வைத்து அதன்படி அவரை பிறழ் சாட்சியாக கருதி அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 27.12.2019 அன்று பஞ்சாயத்து தேர்தலில் ஓட்டு போடுவதற்காக என் பாட்டி தையல்நாயகியை அழைத்து கொண்டு எங்கள் ஊரில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளி வாக்குசாவடி மையத்தில் சென்று ஓட்டு போட்டேன் என்றும், அங்கு பூத் ஏஜென்டாக இருந்த சிறுதொண்டான்காணி கிராமத்தை சேர்ந்த கருப்பையன் மகன் செந்தமிழ் செல்வன் என்னை பாட்டியோடு ஓட்டு போட கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்தார் என்றும், அப்போது என் பாட்டிக்கு உடம்பு சரியில்லை என்று சொல்லிவிட்டு, ஓட்டு போட சொன்னேன் என்றும், அப்போது எங்களுக்குள் வாய் தகராறு ஏற்பட்டது என்றும், அன்று மாலை 05.40 மணியளவில் எங்கள் ஊர் பால்பண்ணை முன்பு பால் அளந்து கொண்டிருந்தபோது, அங்கு வந்த செந்தமிழ் செல்வன் அசிங்கமாக பேசி கையில் வைத்திருந்த அருவாளால் தலையில் வெட்டினார் என்றும், இடது பக்க தலையில் இரத்த காயம் ஏற்பட நான் கத்தியதால் அங்கு இருந்த எனது சகோதரர் சிவாவும் எனது தந்தையும் ஓடி வந்தார்கள் என்றும், அவர்கள் செந்தமிழ் செல்வனிடம் ஏன் இப்படி செய்கிறாய் என்று கேட்டபோது, செந்தமிழ் செல்வனின் அண்ணன் கண்ணன், காமராஜ் ஆகியோரும், அவரது உறவினர் சீமான் ஆகியோரும் கையில் கட்டையோடு ஓடி வந்து அசிங்கமாக பேசி, என் தம்பியின் தலையில் அடித்தார்கள் என்றும், சீமான் கட்டையால் என் தம்பியின் உடம்பில் மாறி மாறி அடித்தார் என்றும், காமராஜ் என் அப்பாவை திட்டி கன்னத்தில் அறைந்தார் என்றும், ஜெயபால் மற்றும் பாப்பாத்தி ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டு, செந்தமிழ் செல்வன் பால்பண்ணையில் இருந்த 2 கேன் பாலை ஊற்றி சேதப்படுத்தினார் என்றும், எங்களிடம் பிரச்சனைக்கு வந்தீர்கள் என்றால் உங்களை கொன்று புதைத்துவிடுவேன் என்று கையில் வைத்திருந்த அருவாள் கத்தியுடன் கொலை மிரட்டல் செய்தார் என்றும், காயம்பட்ட என்னை எனது சகோதரன் தந்தையின் உதவியுடன் இருசக்கர

வாகனத்தில் மருத்துவமனையில் சேர்ந்தேன் என்றும் அப்போது போலீசார் என்னிடம் வாக்குமூலம் பெற்றதாக சாட்சியம் அளித்துவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் கூறப்பட்டது.**

**மறு விசாரணை–**இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | | | |
|---|---|---|---|
| Case No: | | **SC.No.18/2026** | |
| Prosecution Witness : | | **LW - 2 / PW - 2** | |
| Name : | சிவா | Taluk : | |
| S/o. : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **06.06.2026**

(1, 2, 4 எதிரிகள் ஆஜர், 3ம் எதிரி ஆஜர் இல்லை, 3ம் எதிரிக்காக 317 குவிமுச மனு ஏற்பு)

**முதல் விசாரணை**

நான் ஆலந்துறை அறக்கட்டளை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் BBA படித்துள்ளேன். அ.சா.1 எனது சகோதரர். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. சுமார் 6 வருடங்களுக்கு முன்பு மாலை 06.30 மணியளவில் வீட்டின் அருகில் நின்றுகொண்டிருந்தபோது, ஒரே கூட்டமாக அங்கு வந்தார்கள், அப்போது என்ன என்று பார்த்தபோது, என் அண்ணன் கீழே விழுந்துவிட்டார், அதில் அவருக்கு இடது நெற்றியில் காயம் ஏற்பட்டது. எனக்கு தலையில் லேசாக காயம் ஏற்பட்டது, அரியலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தோம். போலீசார் அங்கு வந்தார்கள். என் அண்ணனிடம் வெள்ளை பேப்பரில் கையெழுத்து கேட்டார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

மேற்சொன்ன சாட்சியை பிறழ் சாட்சியாக கருத கோரி அரசு தரப்பில் வேண்டுதல் வைத்து அதன்படி அவரை பிறழ் சாட்சியாக கருதி அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடந்த 27.12.2019 அன்று பஞ்சாயத்து தேர்தலில் ஓட்டு போடுவதற்காக என் அண்ணன், என் பாட்டி தையல்நாயகியை அழைத்து கொண்டு எங்கள் ஊரில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளி வாக்குசாவடி மையத்தில் சென்று ஓட்டு போட்டார் என்றும், அங்கு பூத் ஏஜென்டாக இருந்த சிறுதொண்டான்காணி கிராமத்தை சேர்ந்த கருப்பையன் மகன் செந்தமிழ் செல்வன் என் அண்ணனை பாட்டியோடு ஓட்டு போட கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்தார் என்றும், அப்போது என் பாட்டிக்கு உடம்பு சரியில்லை என்று சொல்லிவிட்டு, ஒட்டு போட சொன்னார் என்றும், அப்போது அவர்களுக்குள் வாய் தகராறு ஏற்பட்டது என்றும், அன்று மாலை 05.40 மணியளவில் எங்கள் ஊர் பால்பண்ணை முன்பு பால் அளந்து கொண்டிருந்தபோது, அங்கு வந்த செந்தமிழ் செல்வன் அசிங்கமாக பேசி கையில் வைத்திருந்த அருவாளால் என் அண்ணன் தலையில் வெட்டினார் என்றும், இடது பக்க தலையில் இரத்த காயம் ஏற்பட என் அண்ணன் கத்தியதால் அங்கு இருந்த நானும் எனது தந்தையும் ஓடி போய் பார்த்தோம் என்றும், நாங்கள் செந்தமிழ் செல்வனிடம் ஏன் இப்படி செய்கிறாய் என்று கேட்டபோது, செந்தமிழ் செல்வனின் அண்ணன் கண்ணன், காமராஜ் ஆகியோரும், அவரது உறவினர் சீமான் ஆகியோரும் கையில் கட்டையோடு ஓடி வந்து அசிங்கமாக பேசி, என் தலையில் அடித்தார்கள் என்றும், சீமான் கட்டையால் என் உடம்பில் மாறி மாறி அடித்தார் என்றும், காமராஜ் என் அப்பாவை திட்டி கன்னத்தில் அறைந்தார் என்றும், ஜெயபால் மற்றும் பாப்பாத்தி ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டு, செந்தமிழ் செல்வன் பால்பண்ணையில் இருந்த 2 கேன் பாலை ஊற்றி சேதப்படுத்தினார் என்றும், எங்களிடம் பிரச்சனைக்கு வந்தீர்கள் என்றால் உங்களை கொன்று புதைத்துவிடுவேன் என்று கையில் வைத்திருந்த அருவாள் கத்தியுடன் கொலை மிரட்டல் செய்தார் என்றும், காயம்பட்ட நானும் , என் சகோதரனும் என் தந்தையின் உதவியுடன்

**இருசக்கர வாகனத்தில் மருத்துவமனையில் சேர்ந்தோம் என்றும் அப்போது போலீசார் என் அண்ணனிடம் வாக்குமூலம் பெற்றதாக சாட்சியம் அளித்துவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் கூறப்பட்டது.</u>**

**<u>மறு விசாரணை</u>–**இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**<u>IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.</u>**

Case No: **SC.No.18/2026**

Prosecution Witness : **LW - 3 / PW - 3**

Name : முருகையன் Taluk :

S/o. : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **<u>06.06.2026</u>**

(1, 2, 4 எதிரிகள் ஆஜர், 3ம் எதிரி ஆஜர் இல்லை, 3ம் எதிரிக்காக 317 குவிமுச மனு ஏற்பு)

**<u>முதல் விசாரணை</u>**

நான் ஆலந்துறை அறக்கட்டளை கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1, 2 எனது மகன்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். பஞ்சாயத்து தேர்தலில் தகராறு நடந்ததாக சொல்வது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் இது குறித்து என்னை எப்போதும் விசாரிக்கவில்லை. என் மகன்கள் இருவருக்கும் அந்த சமயத்தில் காயம் ஏற்பட்டதா என்றால் ஆமாம். ஏதோ தகராரில் காயம் என்று தான் சொன்னார்கள், எனக்கு வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>மேற்சொன்ன சாட்சியை பிறழ் சாட்சியாக கருத கோரி அரசு தரப்பில் வேண்டுதல் வைத்து அதன்படி அவரை பிறழ் சாட்சியாக கருதி அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.</u>

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடந்த 27.12.2019 அன்று பஞ்சாயத்து தேர்தலில் ஓட்டு போடுவதற்காக என் மகன், என் அம்மா தையல்நாயகியை அழைத்து கொண்டு எங்கள் ஊரில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளி வாக்குசாவடி மையத்தில் சென்று ஓட்டு போட்டார் என்றும், அங்கு பூத் ஏஜென்டாக இருந்த சிறுதொண்டான்காணி கிராமத்தை சேர்ந்த கருப்பையன் மகன் செந்தமிழ் செல்வன் என் மகனை என் அம்மாவோடு ஓட்டு போட கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்தார் என்றும், அப்போது என் அம்மாவுக்கு உடம்பு

சரியில்லை என்று சொல்லிவிட்டு, ஒட்டு போட சொன்னார் என்றும், அப்போது அவர்களுக்குள் வாய் தகராறு ஏற்பட்டது என்றும், அன்று மாலை 05.40 மணியளவில் எங்கள் ஊர் பால்பண்ணை முன்பு பால் அளந்து கொண்டிருந்தபோது, அங்கு வந்த செந்தமிழ் செல்வன் அசிங்கமாக பேசி கையில் வைத்திருந்த அருவாளால் என் மகன் தலையில் வெட்டினார் என்றும், இடது பக்க தலையில் இரத்த காயம் ஏற்பட என் மகன் கத்தியதால் அங்கு இருந்த நானும் எனது மகன் சிவாவும் ஓடி போய் பார்த்தோம் என்றும், நாங்கள் செந்தமிழ் செல்வனிடம் ஏன் இப்படி செய்கிறாய் என்று கேட்டபோது, செந்தமிழ் செல்வனின் அண்ணன் கண்ணன், காமராஜ் ஆகியோரும், அவரது உறவினர் சீமான் ஆகியோரும் கையில் கட்டையோடு ஓடி வந்து அசிங்கமாக பேசி, என் மகன் சிவா தலையில் அடித்தார்கள் என்றும், சீமான் கட்டையால் என் மகன் சிவா உடம்பில் மாறி மாறி அடித்தார் என்றும், காமராஜ் என்னை திட்டி கன்னத்தில் அறைந்தார் என்றும், ஜெயபால் மற்றும் பாப்பாத்தி ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டு, செந்தமிழ் செல்வன் பால்பண்ணையில் இருந்த 2 கேன் பாலை ஊற்றி சேதப்படுத்தினார் என்றும், எங்களிடம் பிரச்சனைக்கு வந்தீர்கள் என்றால் உங்களை கொன்று புதைத்துவிடுவேன் என்று கையில் வைத்திருந்த அருவாள் கத்தியுடன் கொலை மிரட்டல் செய்தார் என்றும், காயம்பட்ட என் மகன்களை என் உதவியுடன் இருசக்கர வாகனத்தில் மருத்துவமனையில் சேர்த்தேன் என்றும் அப்போது போலீசார் என் மகனிடம் வாக்குமூலம் பெற்றதாக சாட்சியம் அளித்துவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் கூறப்பட்டது.</u>**

**<u>மறு விசாரணை–</u>**இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.